**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 , திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திரு.S.கோவேந்தன், B.A., LLB., (Hons).,**

நீதித்துறை நடுவர் எண்.2,

திருப்பத்தூர்.

2026-ம் ஆண்டு ஜீலை மாதம் 03-ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.42/2026</u>**

**CNR.NO.TNTU02-012935-2025**

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையம்,
திருப்பத்தூர்.
குற்ற எண்.466/2025 ...... புகார்தாரர்

// எதிரிடை//

ராஜ்குமார், த/பெ.தேவன் .... குற்றம் சாட்டப்பட்டவர்

(குற்றம்சாட்டப்பட்டவர் வழக்கறிஞர் மூலம் வழக்கை எதிர்கொண்டார்)

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சி.சி.எண்.42/2026 |
| 2 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையம், குற்ற எண்.466/2025 |
| | குற்றம் சாட்டப்பட்டவரின் விவரம் | |
| 3 | பெயர் | ராஜ்குமார், த/பெ.தேவன் |
| 4 | வயது | 32 |
| 5 | முகவரி | அண்ணா நகர், மாடப்பள்ளி கிராமம், மடவாளம் அஞ்சல், திருப்பத்தூர். |
| | நாள் | |
| 6 | குற்ற நிகழ்வு | 16.11.2025 |
| 7 | புகார் | 16.11.2025 |
| 8 | கைது செய்யப்பட்ட நாள் | 16.11.2025 |
| 9 | எதிரி பிணையில் வந்த நாள் | - |
| 10 | வழக்கு துவங்கிய நாள் | 21.05.2026 |



KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | 03.07.2026 | | |
| 12 | தீர்ப்பு | 03.07.2026 | | |
| 13 | தாமதத்திற்குரிய காரணம் | -- | | |
| | வழக்கின் நிலை | | | |
| 14 | பிணைக்காலம் | -- | | |
| 15 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 19.12.2025 | | |
| 16 | BNSS பிரிவு 263 –ன்படி (முதல் கேள்வி) | 11.05.2026 | | |
| 17 | பல்வகை மனுவின் மீது இந்நீதிமன்றத்தின் உத்திரவு | – | | |
| 18 | முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை | அரசு தரப்பு சாட்சி | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா. 1 | 21.05.2026 | 21.05.2026 |
| | | அ.சா. 2 | 21.05.2026 | 21.05.2026 |
| | | அ.சா. 3 | 21.05.2026 | 21.05.2026 |
| | | அ.சா. 4 | 21.05.2026 | – |
| | | அ.சா. 5 | 21.05.2026 | 21.05.2026 |
| | | அ.சா. 6 | 27.05.2026 | 27.05.2026 |
| | | அ.சா. 7 | 27.05.2026 | 27.05.2026 |
| | | அ.சா. 8 | 27.05.2026 | 27.05.2026 |
| | | அ.சா. 9 | 10.06.2026 | 10.06.2026 |
| 19 | BNSS பிரிவு.351(1)(b) (வினாவல்) | 16.06.2026 | | |
| 20 | தலைமறைவு எதிரிகளின் விவரங்கள் / அவரது ஆஜர்/ஒப்படைப்பு | இல்லை | | |
| 21 | மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கபட்ட நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும் | இல்லை | | |



KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

இவ்வழக்கு கடந்த 20.01.2026 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 03.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசுக்காக கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்களும், எதிரிக்கு கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சாமிபழனி B.A., B.L., அவர்களும், ஆஜராகியிருக்க, ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலினை செய்ததின் பேரில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

**(1)** இவ்வழக்கில் கடந்த 16.11.2025-ம் தேதி14.30 மணிக்கு புகார்தார் சுரேஷ் என்பவர் திருப்பத்தூர் அண்ணாநகரில் உள்ள தனது சித்தி வீட்டிற்கு சென்றுவிட்டு இருசக்கர வாகனத்தில் கஞூரூர் கிராமத்தில் உள்ள தனது வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது, திருப்பத்தூர் கிராமிய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மாடப்பள்ளி அண்ணாநகர் சுடுகாட்டிடம் எதிரி ராஜ்குமார் என்பவர் கையில் வீச்சருவாளை வைத்துக்கொண்டு புகார்தாரர் சுரேஷை வழிமடக்கி அசிங்கமாகத் திட்டியதோடு, பாக்கெட்டில் வைத்திருக்கும் பணத்தைக் குடு என்று சொல்லி அருவாளை புகார்தாரின் கழுத்தில் வைத்து கேட்டுள்ளார். புகார்தாரர் தன்னிடம் பணம் இல்லை என்று கூறியபோது, எதிரி புகார்தாரர் சுரேஷை பார்த்து, அசிங்கமாகத் திட்டி, புகார்தாரர் சட்டை மேல்பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.600/-ஐ பறித்துக்கொண்டுள்ளார். புகார்தாரர் பயந்து கொண்டு அங்கிருந்து செல்வதற்காக வண்டியை எடுத்தபொழுது, எதிரி புகார்தாரரைப் பார்த்து, "இன்றைக்குத் தப்பித்துக்கொண்டாய், என்றைக்கு இருந்தாலும் உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன்" என்று மிரட்டியுள்ளார். எனவே, எதிரி மீது BNS.பிரிவு.126(2), 296(b), 309(4), 351(3)-ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**(2)** இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துக்கொண்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி ஆஜரானவுடன், குற்றச்சாட்டு வனையப்பட்டு, எதிரியிடம் வினவியபோது எதிரி அதை மறுத்ததால், அரசு தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

**(3)** அரசு தரப்பில் **அ.சா.1 மற்றும் அ.சா.9** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13** வரையிலான ஆவணங்களும், **அ.சா.பொ.1** வழக்குச்சொத்தும் வழக்கிற்கு ஆதாரங்களாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(4)** அரசு தரப்பு சாட்சிகள் முடிவுற்ற பிறகு, சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச.313(1)(b)–ன் கீழ் வினவியபோது எதிரி "பொய் சாட்சியம்" என்றும், அவர் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

**(5)** அ.சா.1 சுரேஷ் கடந்த 16.11.2025 அன்று திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த (அ.சா.ஆ.1) புகாரைப் பெற்றுக்கொண்ட அ.சா.8 காவல் உதவி ஆய்வாளர் திரு.வெங்கடேசன் (அ.சா.ஆ.8) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, தனது முதற்கட்ட புலன் விசாரணையை முடித்து வைத்த வழக்குக்கோப்பைப் பெற்றுக்கொண்ட காவல் ஆய்வாளர் திரு.ஜான் பிரிட்டோ தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது BNS பிரிவு.126(2), 296(b), 309(4), 351(3)of BNS–ன் கீழ் இறுதியறிக்கையைத் தயார் செய்துள்ளார்.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**<u>இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவெனில், அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான BNS பிரிவுகள்.126(2), 296(b), 309(4), 351(3) of BNS–இன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு உள்ளதா? இல்லையா ? என்பதே ஆகும்.</u>**

**(i) <u>அ.சா.1–ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில்,</u>**

**(6)** அ.சா.1 சுரேஷ் தனது சாட்சியத்தில், கடந்த 16.11.2025 தேதியன்று கவரையூரில் பிறந்தநாள் விழாவிற்காக தான் சென்னையிலிருந்து வந்து, விழா முடிந்து அண்ணா நகரில் உள்ள தனது சித்தி வீட்டிற்கு சென்றுவிட்டு வரும்போது, அண்ணா நகர் சுடுகாட்டிடம் எதிரி நின்றிருந்தார் என்றும், அப்போது கத்தியை காண்பித்து தன்னைப் பார்த்து கெட்டவார்த்தைகளால் திட்டி, தான் வந்த வண்டியை நிறுத்தி தன்னிடம் காசை கொடுக்குமாறு கேட்டபோது, தான் இல்லை என்று கூறவே கத்தியைக் காட்டி மிரட்டி பாக்கெட்டில் இருந்த ரூ.600/– பணத்தை எடுத்துக்கொண்டதாகவும், இதுகுறித்து காவல்நிலையத்தில் புகார் அளித்துவிட்டு ஒரு வாரத்தில், தான் கொச்சி சென்றிருந்தபோது, எதிரியின் தாயார் தனது வீட்டிலிருந்த தனது அம்மாவை புகாரை வாபஸ் பெறும்படியும், எதிரி வெளியே வந்தால் பிரச்சனையாகிவிடும் என்று கூறிவிட்டு சென்றுள்ளதாகவும், சாட்சியம் அளித்துள்ளார். இவரின் மூலம் புகார் அ.சா.ஆ.1 ஆகவும், எதிரி அ.சா.1–ஐ தாக்கப் பயன்படுத்திய கத்தி அ.சா.பொ.1–ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**(7)** எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தியபோது, தான் சம்பவ இடத்திற்கு வந்தபோது, எதிரியுடன் மற்றொருவர் இருந்தார் என்றும், எதிரிக்கும் தனக்கும் இரண்டு மாதத்திற்கு முன்பு ஏற்கனவே பிரச்சனையாகி உள்ளது என்றும் கூறியுள்ளார். எனவே, சம்பவத்திற்கு முன்பாகவே எதிரிக்கும் அ.சா.1–ற்கும் விரோதம் உள்ளதை அறிய முடிகிறது.



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**(ii) <u>இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2–ன் சாட்சியத்தைப் பரிசீலிக்கையில்,</u>**

**(8)** அ.சா.2 செந்தில் கடந்த 16.11.2025 அன்று மதியம் தானும், தன்னுடைய நண்பரும் ஏரிக்கரை வழியாக சென்றிருந்தபோது, ஒயின்ஷாப் அருகே எதிரியானவர் மதுபோதையில் கையில் கத்தியை வைத்துக்கொண்டு பிரச்சனை செய்துகொண்டிருந்ததாகவும், தான் அசம்பாவிதம் எதுவும் நடந்துவிடக்கூடாது என்பதற்காக காவல் நிலையம் சென்று புகார் எழுதிக்கொடுத்துவிட்டுச் சென்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**(9)** எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தியபோது, சம்பவ இடத்தில் வியாபாரம் நடந்து கொண்டிருந்ததால், அங்கு ஆட்கள் இருந்ததாக கூறியுள்ளார். ஆனால், இவர் இவ்வழக்கிற்கு சாதகமாக எந்த பதிலையும் அளிக்கவில்லை.

**(iii) <u>இவ்வழக்கின் கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.3–ன் சாட்சியத்தைப் பரிசீலிக்கையில்,</u>**

**(10)** அ.சா.3 திருமதி.சாந்தா தனது சாட்சியத்தில், கடந்த 16.11.2025 அன்று தன்னுடைய கணவர் எம்.ஜி.ஆர் நகரில் உள்ள தன்னுடைய உறவினர் வீட்டிற்குச் சென்றுவிட்டு வந்தபோது, அவர் பதற்றத்துடன் காணப்பட்டது குறித்துக் கேட்டபோது, தன்னை அண்ணா நகர் சுடுகாட்டிடம் ஒருவர் வெட்டுக்கத்தியுடன் மிரட்டியதாகக் கூறிதால், தான் அங்கு சென்றபோது ஆஜர் எதிரியுடன் இருந்த ஒருவர் எதிரியிடமிருந்து கத்தியை வாங்கி வைத்திருந்ததாகவும், இதற்கு முன் தான் அவரைப் பார்த்துள்ளதாகவும், சம்பவம் குறித்துக்கேட்டபோது, அவர் "கத்தியைக் கொடு நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று கூறவே அருகிலிருந்தவர்கள் தன்னை அங்கிருந்து செல்லும்படி அறிவுறுத்தியதால், தான் திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றும், பின்னர் எதிரியின் அம்மா தன்னுடைய மகன் இதே



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

கோவத்தில் வந்து ஏதாவது பண்ணிடபோறான் என்று தனது மாமியாரை மிரட்டியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தியபோது, எதிரிக்கும், தங்களுக்கும் இதற்கு முன்பு பிரச்சனை இருந்ததாக பதில் அளித்துள்ளார்.

**(iv) <u>இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.6 மற்றும் அ.சா.7–ன் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில்,</u>**

**(11)** இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.6 திருமதி.விஜி மற்றும் அ.சா.7 திரு.மணிகண்டன் தங்களது சாட்சியத்தில், பார்வை மகஜரில் உள்ள சாட்சி கையொப்பங்கள் தங்களுடையதுதான் என்று ஒப்புக்கொண்டுள்ளபோதிலும், எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில், தான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தனக்குத் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளனர். இவர்களது சாட்சியமானது பார்வை மகஜரை நிரூபிக்கும் வகையில் அமையவில்லை.

**(v) <u>இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூல மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5–ன் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில்,</u>**

**(12)** அ.சா.4 திரு.திருப்பதி தனது முதல் விசாரணையில், ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகஜரிலும் சாட்சி கையொப்பம் செய்துள்ளதை ஒப்புக்கொண்டபோதிலும், போலீசார் தன்னை விசாரித்தபோது, எதிரி எந்த இடத்தில் பிரச்சனை செய்தார் என்று தெரியாது என கூறியதாகவும், போலீசார் கைப்பற்றிய பொருள் என்ன என்று தனக்குத் தெரியது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**(13)** அ.சா.5 வெங்கடேசன் தனது சாட்சியத்தில், கடந்த 16.11.2025 அன்று தான் திருப்பத்தூரிலிருந்து செலந்தம்பள்ளியில் உள்ள தனது ஊருக்குச் சென்று கொண்டிருந்தபோது, ஏரிக்கோடி திருமால் நகர் அருகே போலீசார்



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

எதிரியை விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் என்றும், அதற்காக தன்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கியதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**(14)** இவர்களது சாட்சியமானது எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அதனடிப்படையிலான கைப்பற்றுதல் மகஜரை நீரூபிக்காததோடு, இவ்வழக்கில் முறையான புலன் விசாரணை நடைபெற்றுள்ளதா என்பது குறித்த சந்தேகத்தை எழுப்பும் வகையில் அமைந்துள்ளது.

**(vi) புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்தைப் பரிசீலிக்கையில்,**

**(15)** இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.8 திரு.வெங்கடேசன் தனது சாட்சியத்தில், அ.சா.1–னிடம் (அ.சா.ஆ.1) புகாரைப் பெற்று, (அ.சா.ஆ.8) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, மேல்விசாரணைக்காக ஒப்படைத்தது குறித்தும், மேற்படி வழக்குக்கோப்பைப் பெற்று மேற்கொண்டு புலன் விசாரணை செய்த அசா.9 ஜான் பிரிட்டோ தனது சாட்சியத்தில், இவ்வழக்கில் (அ.சா.ஆ.9) பார்வை மகஜர், (அ.சா.ஆ.10) மாதிரி வரைபடம் தயார் செய்து பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை விசாரித்து, ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, (அ.சா.ஆ.12) கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து வழக்குச் சொத்தை (அ.சா.ஆ.13) படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தது, இவ்வழக்கின் எதிரியை கைது செய்து நீதிமன்றக் காவலுக்கு தக்க வழிக்காவலுடன் அனுப்பி வைத்தது மற்றும், தனது புலன் விசாரணையை முடித்து சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் எதிரி மீது BNS பிரிவுகள்.126(2), 296(b), 309(4), 351(3)–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது குறித்து சாட்சியம் அளித்துள்ளனர்.

**(16)** அ.சா.9 எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில், அ.சா.1 புகார் அளிப்பதற்கு முன்பாக கத்தியுடன் ஒரு நபர் பிரச்சனை செய்வதாக காவல் நிலையத்திற்குப் புகார் வரவில்லை என்று கூறியுள்ளார்.

KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**(17)** அ.சா.1 தன்னுடைய புகாரில் சம்பவ இடத்தில் பிரச்சனை வேண்டாம் என்று இரண்டு நபர்கள் அங்கிருந்து செல்லும்படி கூறியதாக அளித்துள்ள சாட்சியமும், அ.சா.2 திரு.செந்தில், தானும் காவல் துறையினரிடம் ஒரு புகார் அளித்ததாக போலீசார் விசாரணையில் கூறியதாக அளித்துள்ள சாட்சியமும், மிகைப்படுத்தப்பட்ட சாட்சியம் என்று எதிரி தரப்பில், புலன் விசாரணை அதிகாரியின் மூலம் நிறுவப்பட்டுள்ளது.

**(18)** மேலும், அ.சா.9 சம்பவத்தின்போது எதிரியுடன் இருந்ததாக சொல்லப்படும் மற்றொரு நபர் குறித்து தான் விசாரித்துத் தெரிந்துகொள்ளவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**(vii) பகுப்பாய்வு :**

**(19)** இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக BNS பிரிவுகள்.126(2), 296(b), 309(4), 351(3) of BNS–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது.

**(i) எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள BNS பிரிவு.296(b) குறித்துப் பரிசீலிக்கையில்,**

**(20)** மாண்பமை உச்ச நீதிமன்றம், *N.S. Madhanagopal & Anr. vs. K.Lalitha (2022 INSC 1323)* என்ற வழக்கில், *"Mere usage of abusive words do not constitute an offence u/s. 294(b) of Indian penal code. Instead, there must be further proof that the obscene act or utterance was made to the annoyance of others."* என்று தெளிவுபடுத்தி உள்ளதால்,

இந்த வழக்கில் BNS பிரிவு.296(b)–இன் சாராம்சங்கள் உள்ளடக்கப்படாததால், இக்குற்றச்சாட்டு எதிரிக்கு எதிராக நிரூபிக்கப்படவில்லை.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**(ii) எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள BNS பிரிவுகள்.126(2), 309(4), 351(3) of BNS–இன் கீழான குற்றச்சாட்டுக்கள் குறித்துப் பரிசீலிக்கையில்,**

**(21)** அ.சா.1 மற்றும் அ.சா.3–ன் சாட்சியங்களின் வாயிலாக எதிரிக்கும், தங்களுக்கும் சம்பவத்திற்கு முன்பு பிரச்சனை இருந்தது என்பதும், சம்பவத்தின்போது எதிரியுடன் மற்றொரு நபர் இருந்துள்ளார் என்பதும் நிறுவப்பட்டுள்ளது.

**(22)** அரசு தரப்பு வழக்கில் மேற்குறிப்பிட்ட முரண்பாடுகள் காணப்படுவதாலும், அ.சா.1–ற்கும் எதிரிக்கும் இடையே முன்விரோதம் உள்ள சூழ்நிலையில், தனிநபர் சாட்சிகள் யாரும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக பதில் அளிக்காததாலும், அரசு தரப்பில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அதனடிப்படையிலான கைப்பற்றுதல் மகஜரை நிரூபிக்கத் தவறியுள்ளதாலும், எதிரிக்கு எதிரான மேற்படி குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்குரியதாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**(23)** அரசு தரப்பில் எழும் சந்தேகத்தின் பலன் எதிரியை சென்றடைய வேண்டுமென்பதே இயற்கை நீதி தத்துவமாகும்.

**(viii) முடிவாக,**

**(24)** இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள BNS பிரிவுகள்.126(2), 296(b), 309(4), 351(3)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் போதுமான சாட்சியங்களால் நிரூபிக்கப்படாததால், எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்ப்பளித்து, BNSS பிரிவு.271(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

JUDICIAL MAGISTRATE NO.II

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

(25) இவ்வழக்கில் **CP.No.432/2025**–ல் கண்ட வழக்குச் சொத்தான **வீச்சருவாள்** ஒன்றை மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பிறகு அழிக்கவும், **வழக்குச் சொத்து பணம் ரூ.500/–**ஐ அதன் உரிமையாளருக்கு வழங்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லச்சொல்ல, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு திருத்தங்களுக்குப் பிறகு 2026–ம் வருடம் ஜூலை திங்கள் 03–ஆம் நாளான இன்று என்னால் அவையறியப் பகரப்பட்டது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.II**
**திருப்பத்தூர்.**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| அரசு தரப்பு சாட்சிகள் | சாட்சியின் பெயர் | சாட்சியின் வகை |
|---|---|---|
| **அ.சா.1** | திரு.சுரேஷ், த/பெ.ராஜேந்திரன் | புகார்தாரர் |
| **அ.சா.2** | திரு.செந்தில், த/பெ.செல்வம் | கண்ணுற்ற சாட்சி |
| **அ.சா.3** | திருமதி.சாந்தா, த/பெ.சுரேஷ் | கேள்விப்பட்ட சாட்சி |
| **அ.சா.4** | திரு.திருப்பதி, த/பெ.தாமோதிரன் | ஒப்புதல் வாக்குமூல மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| **அ.சா.5** | திரு.வெங்கடேசன், த/பெ.கிருஷ்ணன் | ஒப்புதல் வாக்குமூல மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| **அ.சா.6** | திருமதி.விஜி, க/பெ.வெங்கடேசன் | பார்வை மகஜர் சாட்சி |
| **அ.சா.7** | திரு.மணிகண்டன், த/பெ.ராமன் | பார்வை மகஜர் சாட்சி |
| **அ.சா.8** | திரு.வெங்கடேசன், த/பெ.செல்வம் | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரி |
| **அ.சா.9** | திரு.ஜான் பிரிட்டோ த/பெ. அமலதாஸ் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| சான்றாவண எண். | சான்றாவணத்தின் வகை | சான்றளித்தவர்/ மெய்ப்பித்தவர் |
|---|---|---|
| **அ.சா.ஆ.1** | புகார் | அ.சா.1 |
| **அ.சா.ஆ.2** | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1–வது சாட்சி கையொப்பம் | அ.சா.4 |
| **அ.சா.ஆ.3** | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1–வது சாட்சி கையொப்பம் | அ.சா.4 |
| **அ.சா.ஆ.4** | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2–வது சாட்சி கையொப்பம் | அ.சா.5 |
| **அ.சா.ஆ.5** | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2–வது சாட்சி கையொப்பம் | அ.சா.5 |
| **அ.சா.ஆ.6** | பார்வை மகஜரில் உள்ள 1–வது சாட்சி கையொப்பம் | அ.சா.6 |
| **அ.சா.ஆ.7** | பார்வை மகஜரில் உள்ள 2–வது சாட்சி கையொப்பம் | அ.சா.7 |
| **அ.சா.ஆ.8** | முதல் தகவல் அறிக்கை | அ.சா.8 |
| **அ.சா.ஆ.9** | பார்வை மகஜர் | அ.சா.9 |
| **அ.சா.ஆ.10** | மாதிரி வரைபடம் | அ.சா.9 |
| **அ.சா.ஆ.11** | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.9 |
| **அ.சா.ஆ.12** | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.9 |
| **அ.சா.ஆ.13** | படிவம் 91 | அ.சா.9 |

**அரசு தரப்பு சான்று பொருள்கள் – CP.No. 432/2025**

| சான்றுப் பொருள் எண். | சான்றுப்பொருள் | சான்றளித்தவர்/ மெய்ப்பித்தவர் |
|---|---|---|
| 1 | சுமார் 73 செ.மீ நீளமுள்ள வீச்சருவாள் | அ.சா.1 |

**<u>எதிரி  தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்</u> –  இல்லை**

**<u>எதிரி தரப்பு சான்று பொருள் – </u>  இல்லை**

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**திருப்பத்தூர்.**

**<u>பின்குறிப்பு</u>**

1. எந்த சாட்சியும் 3 கேட்புரைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. நீதிமன்ற விசாரணையின்போது, எதிரி நீதிமன்றக் காவலில் இருந்தார்.
3. வழக்கு முடிவு குறித்து சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. வழக்குச் சொத்துக்கள் பற்றிய உத்தரவு வழக்குச் சொத்துக்கள் பதிவேட்டில் பதிய உத்தரவிடப்பட்டுள்ளது.
5. இவ்வழக்கின் தீர்ப்பு நகல் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**//உண்மைகல்//**

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.II**
**திருப்பத்தூர்.**